Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 161/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW 7** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | உதயதனுஷ் |
| Father/Husband Name | : | முனியசாமி |
| Village | : | சேரான்கோட்டை, இராமேஸ்வரம் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2025(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் சேரான்கோட்டையில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சேதுபதியை தெரியும். இறந்துபோன நம்புகுமாரை தெரியும். சாட்சிகள் சத்ரியன், விஜிபிரபாகரன், சூர்ய பிரகாஷ், மற்றும் ஜின்னா, நம்புசெல்வம், ஷியாம் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஏரியா பகுதியை சேர்ந்தவர்கள். கடந்த 14.01.2025ம் தேதி இரவு 8 மணியளவில் நான், ஜின்னா, நம்புசெல்வம், ஷியாம் ஆகிய நால்வரும் தெற்கு கரையூர் பூமாரி அம்மன் கோவில் அருகே பேசி கொண்டிருந்தோம். 50 மீட்டர் தொலையில் நம்புகுமார், சேதுபதி, சத்ரியன், விஜிபிரபாகரன், சூர்ய பிரகாஷ் ஆகியோர்கள் நின்று பேசி

கொண்டிருந்தார்கள். அலறல் சத்தம் கேட்டு நாங்கள் பார்த்தபோது, சொர்கேஷ்வரன், கார்த்திகரன், ரஞ்சித், கருணாகரன் மற்றும் மற்ற எதிரிகள் அனைவரும் கம்பு கத்தி, கட்டை ஆகியவற்றை வைத்துக்கொண்டு நம்புகுமாரை சொர்கேஷ்வரன் கத்தியால் குத்தினார். நாங்கள் போய் சத்தம் போட்டவுடன் எதிரிகள் ஓடி விட்டார்கள். அந்த இடத்தில் நம்புகுமார், சேதுபதி, விஜிபிரபாகரன், சத்ரியன்,சூர்யபிரகாஷ் ஆகியோர் காயம் பட்டு கிடந்தனர். அந்த வழியாக வந்த ஆட்டோவில் காயம் பட்டவர்களை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக ஏற்றி அனுப்பி வைத்தோம். சிறிது நேரம் கழித்து நம்புகுமார் இறந்துவிட்டார். மற்ற காயம்பட்ட நபர்களான சேதுபதி, விஜிபிரபாகரன், சத்ரியன்,சூர்யபிரகாஷ் ஆகியோர்களை மேல்சிகிக்சைகாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக சேதுபதி புகார் கொடுத்தார். ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 161/2025** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW 6** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்புசாமி |
| Father/Husband Name | : | முத்துக்கனி |
| Village | : | நடராஜபுரம், இராமேஸ்வரம் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2025(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன். சாட்சி அ.சா.5 கோபியை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1 சேதுபதியை தெரியாது. இறந்துபோன நம்புகுமாரை தெரியும். கடந்த 15.01.2025ம் தேதி இராமேஸ்வரம் சேரன்கோட்டை கடற்கரையிலிருந்து நானும் கோபியும் மீன் விலைக்கு வாங்கிக்கொண்டு டாடா ஏஸ் வாகனத்தில் இராமேஸ்வரம் மீன் மார்க்கெட்டிற்கு சென்று கொண்டிருக்கும்போது, கரையூர் பூமாரி அம்மன் கோவிலுக்கு அருகே காலை 6.30 மணியளவில் சென்று கொண்டிருக்கும்போது இராமேஸ்வரம் துறைமுக காவல்நிலைய ஆய்வாளர் கொலை நடந்த சம்பவ இடத்தினை பார்வையிட்டு வரைபடம்

மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். அதற்கு சாட்சியாக நானும் கோபியும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என் கையெழுத்து தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ. 2.** மேலும் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண்ணை கைப்பற்றினார். அதற்கு ஒரு அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும் கோபியும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.3.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 161/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW 5** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கோபி |
| Father/Husband Name | : | சிவசுப்ரமணியன் |
| Village | : | இராமகிருஷ்ணாபுரம், இராமேஸ்வரம் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன் வியாபாரம் |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2025(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் இராமகிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். சாட்சி முத்துகனி மகன் கருப்புசாமியை தெரியும். நாங்கள் இருவரும் சேர்ந்து மீன் வியாபாரம் செய்து வருகிறோம். அ.சா.1 சேதுபதியை தெரியாது. இறந்துபோன நம்புகுமாரை தெரியும். கடந்த 15.01.2025ம் தேதி இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து மீன் விலைக்கு வாங்கிக்கொண்டு டாடா வாகனத்தில் நானும் கருப்புசாமியும் சென்று கொண்டிருக்கும்போது, கரையூர் பூமாரி அம்மன் கோவிலுக்கு அருகே காலை 6.30 மணியளவில் சென்று கொண்டிருக்கும்போது இராமேஸ்வரம் துறைமுக காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தினை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்

செய்தார். அதற்கு சாட்சியாக நானும் கருப்புசாமியும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என் கையெழுத்து தான். பார்வை மகஜர் **அ.சா.ஆ. 2.** மேலும் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண்ணை கைப்பற்றினார். அதற்கு ஒரு அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும் கருப்புசாமியும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ. 3.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.